**அம்பலங்கொட நகர சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பலங்கொட நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அம்பலங்கொட நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>(ii) பஸ் தரிப்பிட செயற்திட்டத்திற்காக பெற்றிருந்த கடன் தொகைக்காக செலுத்த வேண்டிய மொத்த கடன் வட்டி ரூபா 40,528,326 தொகை எனினும், அதை ரூபா 40,629,369 தொகை என ரூபா 101,043 மிகையாக பதிவு செய்யப்பட்டிருந்தது.<br>(iii) பஸ் தரிப்பிட செயற்திட்டத்திற்காக பெற்றிருந்த கடன் தொகைக்காக 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிலுவைக் கடன் தொகை ரூபா 23,467,280 தொகையாக இருந்த போதிலும், ரூபா 24,045,056 தொகை என ரூபா 577,776 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iv) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பெற்றுக்கொள்வதற்கு 1998 ஆண்டின் போது பெற்றிருந்த கடன் தொகைக்காக 2019 ஆண்டு வரை செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,888,533 இற்கான வட்டித் தொகையை கணக்கீடு செய்திருக்கவில்லை.<br>(v) நகர சபைக்குச் சொந்தமான நகர விளையாட்டுத் திடலின் பகுதி ஒரு விளையாட்டுக் கழகம் ஒன்றிற்கு குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக பெற வேண்டிய குத்தகை மற்றும் நீர் கட்டணத்தை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்வேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 4,205,739 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பெற வேண்டிய கணக்குகள்** | | |
| சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 1983 ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் மின்சார நட்டஈட்டுக் கணக்கு, வாடிவீட்டு நிலுவை வாடகைக் கணக்கு, நிலுவை களியாட்ட வரிக் கணக்கு, நிலுவை அறிவித்தல் பலகைக் கட்டணம் ஆகிய கணக்குகளில் கூட்டுத்தொகை ரூபா 15,895,690 தொகைக்கான பெற வேண்டிய 04 மீதிகளை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தகவல்களை பரிசோதனை செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 35,006,166 தொகையாகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 23,386,431 தொகையாகும்.

### 2.2 வருமானம் நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 10,762 வீதவரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை வீதவரி மற்றும் வரி ரூபா 35,098,989 தொகையாக இருந்தது. இந்த நிலுவைத் தொகையில் ரூபா 100,000 ஐ விடக் கூடிய வீதவரி செலுத்த வேண்டியவர்கள் 39 பேரிடம் ரூபா 8,014,482 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. வருமானப் பரிசோதனை உத்தியோகத்தர் மூவர் சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும் வருமானத்தை அறவீடு செய்வதற்காக கடிதங்களின் மூலம் அறிவுருத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி நிலுவை மீதியை அறவீடு செய்தவற்காக நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை மீதிகளை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வாடகை மீதி ரூபா 3,438,639 தொகை காணப்பட்டது. 09 வர்த்தக கடைத் தொகுதிகள் தொடர்பாக 188 கடையறை உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டிருக்காததுடன், கடையறைகள் நீண்ட காலமாக திருத்த வேலை மேற்கொள்ளாமல் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. பயன்படுத்த முடியாத அளவிற்கு சிதைவடைந்து மற்றும் துப்புறவற்ற நிலமையில் காணப்பட்டது. | உடன்படிக்கையை புதுப்பித்து அறவீடு செய்வதற்கும், புதிய வர்த்தகக் கடைத்தொகுதியொன்று நிர்மாணிப்பதற்கும் திட்டமிட்டுள்ளேன். | உடன்படிக்கைகளை புதுப்பித்து நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்** | | |
| | சபையினால் நாளாந்தம் உக்கக் கூடிய மற்றும் உக்காத குப்பைகள் 18 – 20 டொன்கள் சேகரிக்கப்படுவதுடன், ஹல்வதுர காணியில் குவிக்கப்பட்டு சமமாக்கிய பின் மண் போட்டு மூடப்பட்டிருந்ததுடன், குப்பை தொடர்பாக சபைக்கு நீண்டகால வேலைத்திட்டம் ஒன்று காணப்படவில்லை. மேலும், 2017 ஆண்டின் போது ரூபா 353,948 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு குப்பைகளை வகைப்படுத்தும் நிலையம் ஒன்று நிர்மாணிக்கும் வேலையும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. | குப்பை முகாமைத்துவத்திற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | முறையான குப்பை முகாமைத்துவ திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **பாதீடு** | | |
| (i) | அம்பலாங்கொடை நகர சபையினால் 2021 ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீடு சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன், அது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் 4/03/09/2 இலக்கம் கொண்ட 2021 ஜனவரி 20 திகதி அனுப்பப்பட்ட கடிதத்தின் படி, 2021 ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீட்டின் சபை அங்கீகாரம் பெறல் தொடர்பாக சிக்கல் ஒன்று ஏற்படமாட்டது என அவதானிக்கப்பட்டது. | அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நகர சபைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பாதீடு அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ii) | இது தொடர்பாக நகர சபை மந்திரிமார்களினால் பலப்பிட்டிய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், 2021 ஆண்டிற்கான பாதீடு நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அழிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க மற்றும் உரிய சட்டச் செயற்பாடுகளை கடைபிடித்து சட்டரீதியாக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் படி 2022 ஜூலை 29 திகதி பலப்பிட்டிய உயர் நீதி மன்றத்தால் கட்டளை இடப்பட்டுள்ளது. | அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நகர சபைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பாதீடு அங்கீகரிக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளல்**<br><br>நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 227(1) இற்கு முரணாக நகர மந்திரி ஒருவரினால் 1990 ஆண்டு முதல் 02 கடையறைகள் குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல் தொடர்பாக சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | <br><br><br>2022 பெப்பரவரி 14 திகதி முதல் 2267/4 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி மூலம் தென் மாகாண ஆளுனரினால் அறிவிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளது என. | <br><br><br>சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |